ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1688/4 - 2011 ජනවාරි 10 වැනි සඳුදා - 2011.01.10

1688/4 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 33.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழான அதி விசேட பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் எல்லாவகையான மரக்கறிகள் மற்றும் பழங்கள் பறிக்கப்படும் போது, சேகரிக்கப்படும் போது, களஞ்சியப்படுத்தும் போது, வாகனங்களில் கொண்டு செல்லும் போது, விற்பனைக்காக முன்வைக்கும் போது அல்லது காட்சிப்படுத்தும் போது, பிளாஸ்ரிக் அல்லது தடிப்பான கடதாசி அல்லது மரத்தால் செய்யப்பட்ட கொள்கலன்கள் பாவிக்கப்பட வேண்டியதுடன், ஒவ்வொரு கொள்கலனிலும் இருக்கக்கூடிய பழங்கள் மற்றும் மரக்கறிகளின் ஆகக் கூடிய நிகர நிறை 25 கிலோகிராமிற்கு மேற்படாத வகையில் இருத்தல் வேண்டுமென்று, சகல உள்நாட்டு பழங்கள் மற்றும் மரக்கறிகளின் உற்பத்தியாளர்கள், வாகனங்களில் கொண்டு செல்வோர் மற்றும் விற்பனையாளர்களுக்கு இத்தால் பணிப்புரை விடுக்கின்றது.

இப் பணிப்புரை இத்தால் உடனடியாக அமுலுக்குவரும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்புரையின்படி,

ரூமி மர்சூக்,
தலைவர்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,
கொழும்பு,
2011, சனவரி 10.

01-523